மாவட்ட திட்ட அலுவலகம் திருச்சிராப்பள்ளி நாள் 25/03/2024 பதிவுரு பணிகள்

DPO, திருச்சி

**சுருக்கம்**

**பணியமைப்பு – சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை – தமிழ்நாடு அமைச்சுப்பணி – கருணை அடிப்படையில் பணி நியமனம் – செல்வி.ஜா.செல்வி, இளநிலை உதவியாளர், குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகம், மணப்பாறை வட்டாரம், திருச்சி மாவட்டம் – பணிவரன்முறை செய்தல் – ஆணையிடப்படுகிறது.**

**சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந–1) துறை**

**அரசாணை (ப) எண்.46** நாள் 14.03.2024

சோபகிருது, பங்குனி 1

திருவள்ளுவர் ஆண்டு 2055

படிக்கப்பட்டன:

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (எம்) துறை, நாள் 01.08.2018.
2. சமூக நல ஆணையரின் செயல்முறை நடவடிக்கைகள் ந.க.எண்.2999/ நிர்4(3)/2020, நாள் 04.02.2021.
3. சமூக நல ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண்.25278/நிர்4(3)/ 2022, நாள் 21.06.2023.

******

**ஆணை:–**

கரூர் மாவட்டம், தாந்தோணி வட்டார குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகத்தில், இளநிலை உதவியாளராக பணிபுரிந்த திரு.வி.ஜார்ஜ் அந்தோணி என்பவர் 12.09.2016 அன்று பணியிடை மரணமடைந்ததைத் தொடர்ந்து, அன்னாரின் வாரிசுதாரரும் மகளுமான செல்வி.ஜா.செல்வி என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் வழங்கப்பட்டு, 15.02.2021 முற்பகல் முதல் திருச்சி மாவட்டம், மணப்பாறை வட்டார குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகத்தில் பணிபுரிந்து வருகிறார் என்று தெரிவித்து, செல்வி.ஜா.செல்வி இளநிலை உதவியாளர் என்பவரின் பணியினை அன்னார் பணியில் சேர்ந்த நாளான 15.02.2021 முற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் சமூக நல ஆணையர் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டு, அப்பதவியில் வரன்முறை செய்வதற்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவு பெறுவது கைவிடப்பட்டு ஆணையிடப்பட்டுள்ளது.

3. சமூக நல ஆணையரின் கருத்துருவை உரிய விதிகளின்படி அரசு பரிசீலனை செய்தது. பரிசீலனைக்குப் பின்னர், கரூர் மாவட்டம், தாந்தோணி வட்டார குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகத்தில், இளநிலை உதவியாளராக பணிபுரிந்தபோது 12.09.2016 அன்று பணியிடை மரணமடைந்த திரு.வி.ஜார்ஜ் அந்தோணி என்பவரின் வாரிசுதாரரும் மகளுமான செல்வி.ஜா.செல்வி என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்டு, தனியர் பணியில் சேர்ந்த நாளான 15.02.2021 முற்பகல் முதல் தனியரது பணியினை இளநிலை உதவியாளர் பதவியில் வரன்முறை செய்யலாம் என அரசு முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

4. செல்வி.ஜா.செல்வி, இளநிலை உதவியாளர், குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகம், மணப்பாறை வட்டாரம், திருச்சி மாவட்டம் என்பவரின் பணியானது இளநிலை உதவியாளர் பதவியில் 15.02.2021 முற்பகல் முதல் முன்தேதியிட்டு வரன்முறைப்படுத்தப்படுவதால் தனியருக்கு கிடைக்கக் கூடிய ஆண்டு ஊதிய உயர்வு மற்றும் இதர படிகள், நிலுவைத் தொகை ஏதேனும் இருப்பின் அதனைப் பெறுவதற்கு விதிகளின்படி தனியர் தகுதியுடையவர் ஆகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஜெயஸ்ரீ முரளீதரன்
அரசு செயலாளர்.

**பெறுநர்**

செல்வி.ஜா.செல்வி,
இளநிலை உதவியாளர்,
குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகம்,
மணப்பாறை வட்டாரம், திருச்சி மாவட்டம்,
(சமூக நல ஆணையர், சென்னை-5 வழியாக).
சமூக நல ஆணையர், சென்னை-5.
இயக்குநர் மற்றும் குழும இயக்குநர்,
ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள், சென்னை-113.
மாநில முதன்மைக் கணக்காயர், சென்னை-18.
மாவட்ட கரூவூல அலுவலர், திருச்சி மாவட்டம்.

**நகல்:-**

மாண்புமிகு அமைச்சர் (சமூக நலன் - மகளிர் உரிமை)
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
அரசு செயலாளர், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்
துறை அவர்களின் முதன்மை தனிச் செயலாளர், சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்